# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>MCOP. No.358/2017</u>

2026-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 08-ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.1 வது** நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | உலகநாதன் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>**முதல் விசாரணை:**</u>

நான் இந்த வழக்கில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். முதல்தகவல்அறிக்கை ம.சா.ஆ.1, பிரேதக்ஷராய்வுஅறிக்கை நகல் ம.சா.ஆ.2, வாரிசுசான்று நகல் ம.சா.ஆ.3, எனது மகன் பி.ஏ.தமிழ் பட்டப்படிப்பு படித்தற்கான கல்விசான்று நகல் ம.சா.ஆ.4, என்மகளின் பள்ளி மாற்று சான்றிதழ் நகல் ம.சா.ஆ.5,

<u>**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை**</u>:

எனக்கு விபத்து பற்றி நேரடியாக தெரியாது. விபத்திற்கு என்மருமகன் தான் காரணம் என்றால் சரியல்ல. என்மகள் இறப்பதற்கு சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் திருமணம் ஆனது. என்மகளை திருச்சியில் திருமணம் செய்து கொடுத்தேன். திருமணம் ஆனது முதல் எனதுமகள் திருச்சியில் கணவருடன் இருந்தார். எனக்கு 2மகன்கள் மற்றும் இறந்துபோன மகளோடு சேர்த்து 2மகள்கள். நான் தஞ்சாவூரில் தொடர்ந்து வசித்து வருகிறேன். தற்போது என்னை என்மகன்கள் கவனித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் தனித்தனியாக போய்விட்டார்கள். நான் என்மகன்களுடன் வசித்துவருகிறேன்

என்றால் சரியல்ல. என்மகள் இறந்ததால் எந்தவிதமான வருமான இழப்பு எனக்கு கிடையாது என்றும், நான் அவரை சார்ந்து இருக்கவில்லை என்றால் சரியல்ல. தற்போது என்மனைவி இறந்துவிட்டார். என்மகள் தனிப்பயிற்சி கொடுத்து அதன்மூலம் மாதம் ரூ.20,000/- வருமானம் ஈட்டிவந்தார் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்மகளின் இறப்பினால் எனக்கு பாசஇழப்பு மட்டும் தான் ஏற்பட்டது என்றும், வேறு எந்த இழப்பும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் அதிகமான நஷ்டஈடு கோரியுள்ளேன் என்றும், அது கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.